<u>**ஒட்டன்சத்திரம் நகராட்சி**</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் சாதாரணக் கூட்டம் நாள். 10.09.2018 (திங்கள் கிழமை) அன்று மாலை 05.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 07.09.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொது நிதி 2018–19–ன் கீழ் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிக்கு அனுப்பி வைக்க தீர்மான எண் 27, நாள் 20.02.2018–ல் தனிஅலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதியளித்து ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 31.08.2018–ம் நாள் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன் | ரூ.370/– |
| 2 | திரு. பி.வீராச்சாமி | ரூ.364/– |

வரப்பெற்ற நேரடி ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 2–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி நேரடி ஒப்பந்தப்புள்ளியில் பணிக்கான பணியாளர்களை நாள் ஒன்றுக்கு ரூ.364/– ஊதிய விகிதத்தில் அனுப்ப வரப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீராச்சாமி என்பவரின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.9693/2018/எப்5 நாள்.30.05.2018–ம் நாளைய 2018–2019–ம் ஆண்டு விலைவிகிதத்திற்கு மிகாமல் உள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, வேலை உத்திரவு வழங்கியதை, மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 192**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொது நிதி 2018–19–ன் கீழ் பொறியியல் பிரிவு தொழில் நுட்ப பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர்களை பணிக்கு அனுப்பி வைக்க தீர்மான எண் 26, நாள் 20.02.2018–ல் தனிஅலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதியளித்து ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 31.08.2018–ம் நாள் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன் | ரூ.660/– |
| 2 | திரு. பி.வீராச்சாமி | ரூ.656/– |

வரப்பெற்ற நேரடி ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 2–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி நேரடி ஒப்பந்தப்புள்ளியில் பணிக்கான பணியாளர்களை நாள் ஒன்றுக்கு ரூ.656/– ஊதிய விகிதத்தில் அனுப்ப வரப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீராச்சாமி என்பவரின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.9693/2018/எப்5 நாள்.30.05.2018–ம் நாளைய 2018–2019–ம் ஆண்டு விலைவிகிதத்திற்கு மிகாமல் உள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, வேலை உத்திரவு வழங்கியதை, மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 193**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொது நிதி 2018–19–ன் கீழ் அலுவலக கணணி இயக்க பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர்களை பணிக்கு அனுப்பி வைக்க தீர்மான எண் 25, நாள் 20.02.2018–ல் தனிஅலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதியளித்து ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 31.08.2018–ம் நாள் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன் | ரூ.410/– |
| 2 | திரு. பி.வீராச்சாமி | ரூ.403/– |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 2–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் பணிக்கான பணியாளர்களை நாள் ஒன்றுக்கு ரூ.403/– ஊதிய விகிதத்தில் அனுப்ப வரப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீராச்சாமி என்பவரின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.9693/2018/எப்5 நாள்.30.05.2018–ம் நாளைய 2018–2019–ம் ஆண்டு விலைவிகிதத்திற்கு மிகாமல் உள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, வேலை உத்திரவு வழங்கியதை, மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 194**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொது நிதி 2018–19–ன் கீழ் பொதுசுகாதாரப் பிரிவு வாகன ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர்களை ஓட்டுநர் பணிக்கு அனுப்பி வைக்க தீர்மான எண் 28, நாள் 20.02.2018–ல் தனிஅலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதியளித்து ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 31.08.2018–ம் நாள் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன் | ரூ.457/– |
| 2 | திரு. பி.வீராச்சாமி | ரூ.453/– |

வரப்பெற்ற நேரடி ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 2–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி நேரடி ஒப்பந்தப்புள்ளியில் பணிக்கான பணியாளர்களை நாள் ஒன்றுக்கு ரூ.453/– ஊதிய விகிதத்தில் அனுப்ப வரப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீராச்சாமி என்பவரின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.9693/2018/எப்5 நாள்.30.05.2018–ம் நாளைய 2018–2019–ம் ஆண்டு விலைவிகிதத்திற்கு மிகாமல் உள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, வேலை உத்திரவு வழங்கியதை, மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 195**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொது நிதி 2018–19–ன் கீழ் குடிநீர் பிரிவு விருப்பாட்சி தலைமை நீரேற்று நிலைய மோட்டார் இயக்க தேவையான தொழிநுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர்களை தொழிநுட்ப உதவியாளர்களை பணிக்கு அனுப்பி வைக்க தீர்மான எண் 167, நாள் 06.08.2018–ல் தனிஅலுவலர் அவர்களால் நிர்வாக அனுமதியளித்து ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 31.08.2018–ம் நாள் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன் | ரூ.508/– |
| 2 | திரு. பி.வீராச்சாமி | ரூ.504/– |

வரப்பெற்ற நேரடி ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 2–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி நேரடி ஒப்பந்தப்புள்ளியில் பணிக்கான பணியாளர்களை நாள் ஒன்றுக்கு ரூ.504/– ஊதிய விகிதத்தில் அனுப்ப வரப்பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.வீராச்சாமி என்பவரின் நேரடி ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.9693/2018/எப்5 நாள்.30.05.2018–ம் நாளைய 2018–2019–ம் ஆண்டு விலைவிகிதத்திற்கு மிகாமல் உள்ளதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, வேலை உத்திரவு வழங்கியதை, மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 196**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 6**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண் 73 நாள். 19.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண் 76 நாள்.23.07.2018–ல் உத்திரவிடப்பட்டுள்ளவாறும், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின்சுற்றறிக்கை ந.க.எண்.20555/ஆர்1 நாள்07.09.2018–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும் சொத்துவரி பொது சீராய்வு –2018 மண்டலங்கள் பகுத்தாய்வு மற்றும் மண்டலங்களுக்கான மதிப்பு மாற்றம் செய்ய அலுவலர்கள் குழு (Official Commmite ) அமைக்கப்பட்டது.

மேற்படி குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளவாறு கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டு பகுதிகளிலும் மண்டலங்கள் பகுத்தாய்வு செய்தும் மண்டல மதிப்பு உயர்வு செய்தும் மன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | ஏற்கனவே உள்ள மண்டல விபரம் | தற்போது மாற்றி அமைக்கப் பட வேண்டிய மண்டல விபரம் |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| 1 | 1 | கே.கே.நகர் | C | C |
| 2 | | சங்குப்பிள்ளைபுதூர் | C | B |
| 3 | | நாகணம்பட்டி | C | B |
| 4 | | செல்லப்பகவுண்டன் புதூர் | C | C |
| 5 | 2 | இருளகுடும்பன் பட்டி–1 | C | C |
| | | இருளகுடும்பன் பட்டி–2 | C | A |
| 6 | | ஏ.பி.காலனி | C | C |
| 7 | | நாகணம்பட்டி | C | A |
| 8 | | பெரியாஞ்செட்டிபட்டி | C | C |
| 9 | 3 | திண்டுக்கல் பழனி சாலை வடக்கு | A | A |
| 10 | | டிரசரி காலனி | A | A |
| 11 | 4 | திண்டுக்கல் பழனி சாலை தெற்கு | A | A |
| 12 | | சம்சுதின் காலனி | A | A |
| 13 | | சொசைட்டி காலனி | A | A |
| 14 | 5 | காந்தி நகர் கிழக்கு | B | B |
| 15 | 6 | காந்தி நகர் தெற்கு | B | B |
| 16 | | சாஸ்தா நகர் | B | B |
| 17 | 7 | விஸ்வநாத நகர் | B | B |
| 18 | | வினோபா நகர் | B | B |
| 19 | 8 | திண்டுக்கல் பழனி சாலை தெற்கு | A | A |
| 20 | | திண்டுக்கல் பழனி சாலை வடக்கு | A | A |
| 21 | | ஏ.எஸ்.எம் பேட்டை | A | A |
| 22 | | நல்லக்கவுண்டன் நகர் | A | A |
| 23 | | கைராசி நகர் | A | A |
| 24 | 9 | பைபாஸ் சாலை | A | A |
| 25 | | திண்டுக்கல் பழனி சாலை தெற்கு | A | A |
| 26 | | திண்டுக்கல் பழனி சாலை வடக்கு | A | A |
| 27 | | தென்றல் நகர் | A | A |
| 28 | | திருவள்ளுவர் சாலை | A | A |
| 29 | 10 | தாராபுரம் சாலை | A | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | | மேட்டுப்பட்டி | B | A |
| 31 | 11 | மாருதி நகர் | B | A |
| 32 | | தும்மிச்சம்பட்டி புதூர் | C | B |
| 33 | 12 | நாயக்கனூர் | C | C |
| 34 | | கஸ்தூாரி நகர் | C | B |
| 35 | | தும்மிச்சம்பட்டி மேற்கு | B | B |
| 36 | 13 | பட்டறை தெரு | B | B |
| 37 | | முத்தாலம்மன் கோவில் தெரு | B | B |
| 38 | | தும்மிச்சம்பட்டி கிழக்கு | B | B |
| 39 | 14 | தும்மிச்சம்பட்டி மேற்கு | B | B |
| 40 | 15 | ஏ.டீ காலனி | C | C |
| 41 | | தும்மிச்சம்பட்டி | C | C |
| 42 | | சத்யாநகர் | C | C |
| 43 | 16 | தாராபுரம் சாலை | A | A |
| 44 | | வ.உ.சி. நகர் | A | A |
| 45 | | சண்முகவேல் புரம் | A | A |
| 46 | | லட்சுமி புரம் | A | A |
| 47 | 17 | அணைப்பட்டி | A | A |
| 48 | | ஏ.பி.பி நகர் | A | A |
| 49 | | பழனிக்கவுண்டன் புதூர் | A | A |
| 50 | | குறிஞ்சி நகர் | A | A |
| 51 | | கூடலிங்கபுரம் | A | A |
| 52 | | ஆத்தூர் | A | A |
| 53 | 18 | சித்தப்பட்டி தோட்டம் | A | A |
| 54 | | தாராபுரம் சாலை (கிழக்கு மேற்கு) | A | A |
| 55 | | பொன்னகரம் | A | A |

**<u>மண்டல மதிப்பீடு</u>**

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | 0.70 | 1.10 |
| B | 0.60 | 0.90 |
| C | 0.50 | 0.80 |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 197**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 நாகணம்பட்டி பூங்கா பகுதியில் சுற்றுச்சுவர், மூன்று தொட்டிகள் கொண்ட கூடம் தண்ணீர் வசதி மற்றும் மரச்செடிகளுடன் Onsite facility centre பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நுண் உரக்கூடங்கள் அமைத்திட நான்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டதில் தற்போது ஒரு இடமான சின்னக்குளம் மட்டுமே பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள மூன்று இடங்கள், ஒன்று நீதிமன்ற தடை உத்திரவாலும் மற்ற இரண்டு இடங்கள் அப்பகுதி பொதுமக்கள் ஆட்சேபணை செய்வதாலும், பணி மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஏற்கனவே நாகணம்பட்டி பூங்கா பகுதியில் Onsite facility centre அப்பகுதி மக்கள் எதிர்ப்புகளுக்கு இடையில் பணி மேற்கொள்ளப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வரும் நிலையில் மேற்படி வளாகத்தினை முழு அளவிலான நுண்உரக்கூடமாக (2TPD) கூடுதல் வசதிகள் செய்து மாற்ற முழு அளவில் செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

ஏனவே மேற்படி வளாகத்தில் கூடுதலாக 12 தொட்டிகள் கட்டவும், மெசினேரிஸ்கள் வைக்கவும், குப்பைகள் பிரித்தெடுக்கவும், பூங்கா தெற்கு பகுதியில் கூடம் அமைத்து மின் வசதி மற்றும் இதர கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.9.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தனிஅலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளளாம்.
2. அவசர அவசியம் கருதியும் உரக்கிடங்கிற்கு நிலம் இல்லாத நிலையிலும் ஒதுக்கீடு செய்த நுண் உரக் கூடம் பணிகள் பொதுமக்களின் எதிர்ப்பாலும், நீதிமன்ற தடை உத்திரவினாலும், காலதாமதம் ஏற்பட்டு வருவதாலும், திடக்கழிவு மேலாண்மை விதிகளை முழுஅளவில் கையாள வேண்டிய நிலையில், காலதாமதம் ஆவதனை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 198**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 8</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பூங்கா இடங்கள் திறந்தவெளியாக இருப்பதால், பாதுகாப்பற்றதாகவும், ஆக்கிரமிப்பு செய்ய ஏதுவாகவும் உள்ளது. இடங்களின் விபரம் பின்வருமாறு,

| வ.எண் | வார்டு எண் | பகுதிகள் |
|---|---|---|
| 1 | 8 | கைராசி நகர்–நகராட்சி அலுவலர்கள் குடியிருப்பு |
| 2 | 3 | அங்கு நகர் 1 |
| 3 | 3 | அங்கு நகர் 3 |
| 4 | 4 | பாச்சலூர் மலைப்பிரிவு |
| 5 | 9 | தென்றல் நகர் 2 |

மேற்காணும் பூங்கா இடங்களை சுற்றி ஆர்.சி.சி கம்பம் நட்டு முற்கம்பி வேலி அமைத்து கேட் வசதி செய்திடவும், மரக்கன்றுகள் வளர்த்திடவுடம், Onsite facility centre ஏற்படுத்தவும் ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தனிஅலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்கா இடங்களை பாதுகாத்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு பணி முடிவு புகைப்படங்கள் அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால், காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 199**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண். 15–க்குட்பட்ட எரிவாயு தகன மேடைக்கு செல்லும் சாலையில் அமைந்துள்ள ஆண்களுக்கான பொதுக்கழிவறையில் கோப்பைகள், கதவுகள், தண்ணீர் செல்லும் குழாய்கள் சிதலமடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலை உள்ளது. தற்போது திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் தீவரமாக அமலில் உள்ள நிலையில் மேற்படி கழிவறையில் பொது மராமத்து செய்து உபயோகத்திற்கு கொண்டு வரவேண்டியுள்ளது. இதற்காக ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தனிஅலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் பொதுசுகாதாரம் நலன் கருதியும், திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டத்தினை ஆய்வு செய்திட QCI வருகை தரஉள்ளதால், காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 200**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி மேற்கு பகுதியில் சிதலமடைந்த நிலையில் பழைய கட்டிடம் ஒன்று வைப்பறையாக செயல்பட்டு வருகின்றது. தற்போது மழைக்காலம் வர இருப்பதால், மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும், அப்பகுதியில் நுண் உரக்கூடம் கட்டிக்கொள்ளவும், குடிநீர் பிரிவு பொதுசுகாதார பிரிவிற்கு அலுவலக கட்டிடத்தின் கீழ் பகுதியில் பி.பி சீட் மேற்கூறை மற்றும் பக்கவாட்டு சீட் அமைத்து வைப்பறை அமைத்துக்கொள்ளவும் வேண்டியுள்ளது.

மேலும் கைராசி நகர் நகராட்சி பொறியாளரின் குடியிருப்பினை வர்ணம் பூசிடவும் வேண்டியுள்ளது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்,
2. அவசர அவசியம் கருதியும் நுண் உரக்கூட பணிகளை துவங்க வேண்டியுள்ளதால், காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 201**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு 12–க்குட்பட்ட கஸ்தூாி நகர் சாலை எரிவாயு தகன மேடை செல்லும் சாலையிலிருந்து, தும்மிச்சம்பட்டி புதுார் சந்திப்பு சாலை வரை உள்ளதாகும். மேற்படி சாலை வடக்கு தெற்காக அமைந்துள்ளது. சாலையின் கிழக்கு பகுதியில் ஓடை (KATCHA CHANNEL) செல்கிறது. மேற்காணும் ஓடை பரப்பலாறு அணையில் இருந்து வரும் பிரதான கால்வாய் ஆகும்.

கஸ்தூாி நகர் சாலை 3.0 மீட்டர் அகலத்திற்கு குறைவாகவும், கிழக்கு பகுதி ஓடை 12 அடி முதல் 15 அடி வரை ஆழமாக இருப்பதால், பொதுமக்களின் போக்குவரத்து நலன் மற்றும் சிற்றுாந்து போக்குவரத்து கருதி சாலையினை அகலப்படுத்தி தார்சாலை அமைத்திடவும், ஓடைக்குள் சாலை பக்கமாக மட்டும் தடுப்பு சுவர் கட்டவும், திட்டமிடப்பட்டு மேற்காணும் பணி தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு திட்டம் 2017–18–ன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைப்பெற்று வருகிறது.

இந்நிலையில், மேற்படி ஓடையில் (KATCHA CHANNEL) மழைக்காலங்களில் நீர்வரத்து அதிகமாக சென்று, கஸ்தூாி நகர் சாலை கிழக்கு பகுதியில் உள்ள தோப்பு பகுதிக்குள் மழைநீர் நுழைந்து, சேதத்தினை ஏற்படுத்துவதோடு, நகருக்குள் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்பதால், அப்பகுதி மக்களின் கோரிக்கை படி மண் அரிமானம் ஏற்படக்கூடிய துாரத்திற்கு மட்டும் ஓடையின் மற்றொரு பக்கம் தடுப்பு சுவர் கட்டிட ரூ.9.90 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி கோரி, தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. வருவாய் நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.
2. தற்போது வடக்கிழக்கு பருவமழை 2018 அக்டோபர் மாதம் முதல் துவங்க உள்ள நிலையில், பருவமழையினை எதிர்கொண்டு சேதரத்தினை தவிர்த்து பணியினை முன் கூட்டியே முடிக்க வேண்டி இருப்பதால், மேலும் காலதாமதம் ஆவதை தவிக்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுலவரின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 202**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள நீர் ஆவி கொதிகலன் மற்றும் மாவு அறைக்கும் இயந்திரங்கள் பழுது ஏற்பட்டதால், அதனை பழுது நீக்க பணி மேற்கொண்டமைக்கான சூரியா ஹோம் அப்லைன்ஸ், ஒட்டன்சத்திரம் என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.44,181/– வழங்க கேட்டு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையிகையினை பணி மேற்கொண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணி பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் உணவக பயன்பாட்டின் அவசியம் கருதி மேற்கொண்டதால், மேற்படி நிறுவன பட்டியல் தொகையினை வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 203**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண்–12 கஸ்தூாரி நகர் சாலை கிழக்கு பக்கம் தடுப்பு சுவர் கட்ட ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டு பணிக்கு 03.09.2018 தேதிய ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி உத்திரவின்படி 10.09.2018–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரமதி.வி.மீனாள்,<br>18,கார்பரேசன் சாலை,<br>தேவகோட்டை. | 0.21% குறைவு |
| 2 | ஸ்ரீசெல்லியம்மன் அன் கோ,<br>43 ஜவஹர் நகர்,<br>கவுடம் பாளையம்,<br>கோயம்முத்தூர்–30. | 0.85% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு மதிப்பீட்டை காட்டிலும் 0.21% குறைவாக கொடுத்துள்ள வரிசை எண்.1–ல் உள்ள திருமதி.வி.மீனாள், தேவகோட்டை என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. வடகிழக்கு பருவ மழை 2018 துவங்க உள்ள நிலையில் பருவமழையினை எதிர்கொண்டு சேதாரத்தினை தவிர்த்து பணியினை விரைவில் முடிக்க வேண்டியிருப்பதால், காலதாமதம் ஆவதனை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி, நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 204**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் திட்டப் பணிகள் மற்றும் இதர பொறியியல் பிரிவு பணிகள் அதிக அளவில் உள்ளதால் பொறியியல் பிரிவிற்கு தனியாக கம்யூட்டர் மற்றும் பிரிண்டர்கள் சப்ளை செய்தற்காக Odc Computers ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.97,267/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொறியியல் பிரிவு பணியின் அவசியம் கருதி கணினி மற்றும் பிரிண்டர் முதலானவைகள் சப்ளை செய்த நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கவும் மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கவும் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 205**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 15</u>**

அரசாணை (நிலை) எண்.82 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் (மம2) துறை நாள்.23.08.2018–ல் இந்நகராட்சிக்கு சொந்தமான புல எண்.234/1ல் சுமார் 11.63.0 ஹக்டெர் பரப்பளவில் அமைந்துள்ள சின்னக்குளத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சுற்றுலா மையங்கள் மற்றும் பூங்காக்கள் ஏதும் இல்லாத நிலையில் மேற்படி குளத்தில் மேற்கு மேட்டுப்பகுதியாகவும், சமதளப்பகுதியாகவும் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் நகராட்சி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குழந்தைகள் விளையாடும் இடம் மற்றும் செயற்கை நீருற்று விளக்கு வசதிகளுடன் கொண்ட பூங்கா அமைத்திடவும், மேற்படி குளத்தில் கழிவுநீர் சேராத வகையில் Interruption and diversion வடிகால் அமைத்தும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தும் குளத்தினை தூர்வாரி மழை நீரை சேகாரம் செய்திடவும், குளத்தின் கரையில் நடைபாதை பூங்கா அலங்கார மின் விளக்குகள் மற்றும் செயற்கை நீரூற்றுடன் சிறுவர் விளையாடுமிடம் அமைத்து சுற்றுச்சுழலை மேம்படுத்திடவும், ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2018–19–ன் கீழ் ரூ.350.00 இலட்சமும், 2019–2020–ன் கீழ் ரூ.350.00 இலட்சமும் மொத்தம் ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி இரண்டாண்டு திட்ட மானிய நிதி ரூ.700.00 இலட்சம் ஒதுக்கீட்டினை ஏற்று சின்னக்குளத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொதுமக்களின் நலன் கருதி சின்னக்குளத்தினை மேம்படுத்தும் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.700.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்க கோரி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 206**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 16</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ம.ஏ–2) துறை, அரசாணை (நிலை) எண்.82 நாள்.23.08.2018–ல் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2018–2019–ம் ஆண்டு ரூ.350.00 இலட்சமும் மற்றும் 2019–2020–ம் ஆண்டுக்கான நிதியில் ரூ.350.00 இலட்சமும் மொத்தம் ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சின்னக்குளத்தினை அபிவிருத்தி செய்யும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்திட கள ஆய்வு நடத்தி சின்னக்குளத்தினை அளவீடு செய்தல், புகைப்படத்துடன்கூடிய வரைபடங்கள் தயார் செய்தல், நடப்பு ஆண்டு விலை விகிதத்திற்கு மதிப்பீடு தயார் செய்தல், தமிழ்நாடு திறந்தநிலை ஒப்பந்தப்புள்ளி சட்டவிதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் நிபந்தனைகளுடன் தயார் செய்தல் போன்ற பணிகளை ஒருங்கிணைத்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற ஏதுவாக திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் போதுமான தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லை.

எனவே மேற்காணும் திட்ட மதிப்பீடுகளை தயார் செய்திட தொழில்நுட்ப கலந்தாலேசகர் நியமணம் செய்திட அங்கீகரிக்கலாம், அதற்கான செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துகொள்ளஅனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், குறித்த காலத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்து, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டியுள்ளதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, மன்றத்தின் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 207**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 17**

2018–ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா 13.09.2018–ம் நாளன்று நடைபெறுவதால், ஒட்டன்சத்திரம் வட்டப் பகுதிகளில் உள்ள இந்து முன்னனி மற்றும் இந்து மக்கள் கட்சி அமைப்புகளால் வைக்கப்பட்டுள்ள சிலைகளை விருப்பாட்சி நகராட்சியின் தலைமை நீரேற்று நிலைய ஆற்று படுகையில் 14.09.2018 மற்றும் 15.09.2018 ஆகிய தினங்களில் சிலைகளை கரைப்பதை தொடர்ந்து ஆற்றுப்படுகையில் சிலைகள் கரைக்க ஏதுவாக தண்ணீர் தேங்கும் வகையில் ஆற்றின் குறுக்கே சுத்தம் செய்து கரைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளவும், கரைக்கும் இடத்திற்கு செல்ல ஏதுவாக தற்காலிக பாதைகள் அமைக்கவும், வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச மதிப்பீட்டு செலவினம் ரூ.2.00 இலட்சம் தனிஅலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 208**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 18**

ஒட்டன்சத்திரம் நகராட்சி –பொதுசுகாதாரம்–திடக்கழிவு மேலாண்மை பணிகள். ஒட்டன்சத்திரம் நகராட்சி 01.10.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 30274 மக்கள் தொகையும், 13.05 ச.கி.மீ. பரப்பளவில் 26 உட்கடை கிராமங்களை உள்ளடக்கிய இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. ஜீலை 2018 வரி விதிப்புகளின்படி 12782 குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களுடன் சுமார் 36000 மக்கள் தொகை இருப்பது அறியப்படுகிறது. இந்நகராட்சி கோவை, மதுரை, திருச்சி, பாலக்காடு ஆகிய நகரங்களை இணைக்கும் மையப்புள்ளியாகவும், இங்கு செயல்பட்டு வரும் காந்தி தினசரி காய்கறி மார்க்கெட் இந்திய அளவில் பிரசித்தி பெற்ற மார்க்கெட் ஆகவும் உள்ளது என்பதால் வந்து செல்வோரின் எண்ணிக்கை சராசரியாக 15000 உள்ளது. மேலும் நகரின் மையப்பகுதியில் 3.5 கி.மீ. தேசிய நெடுஞ்சாலை மற்றும் 3 கி.மீ. மாநில நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பிப்ரவரி–2018 (வேபிரிட்ஜ் எடை) கணக்கீட்டின்படி நாள் ஒன்றுக்கு சராசரியாக 18 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரம் செய்து அப்புறப்படுத்து வருகிறது. இப்பணிக்காக நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 47, கண்காணிப்பு பணிக்கான துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள்–2, துப்புரவு ஆய்வாளர்–1 உள்ள நிலையில் துப்புரவு பணியினை முறையாக மேற்கொள்ள இயலாததால், அரசாணை (நிலை) எண் 101, MA & WS நாள்.30.04.1997–ன்படி பணியிடம் தோற்றுவித்து தனியார் மயமாக்கல் முறையில் 116 கூடுதல் பணியாட்களை கொண்டு துப்புரவுபணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் Roc.No.31316/P3/2013 DATED:-25.09.2013 - ல் அனுமதி பெற்று 2014–2015 முதல் 2016–2017 வரை மூன்று ஆண்டுகள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், பணிக்கான அனுமதி காலம் ஜுன்–2017 உடன் முடிவுற்றது. மேலும் இந்நகராட்சிக்கு உரக்கிடங்கு ஏதுமில்லாத நிலையில் மைக்ரோ கம்போஸ் சென்டர் (MCC) ஐந்து எண்ணம் உள்கட்டமைப்பு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளதால், அதற்கு தேவையான பணியாட்களும், துப்புரவு பணிக்கு தேவையான பணியாட்களும் அரசாணை (நிலை) எண் 101, MA&WS நாள். 30.04.1997–ன்படி பணியிடம் தோற்றுவிக்கப்பட்டதன்படி 198 பணியாட்கள் தேவையுள்ள நிலையில், நிரந்தர துப்புரவு பணியாட்கள் 47 உள்ளதால், தேவையுள்ள 151 பணியாட்கள், தனியார் மையமாக்கல் முறையில் பணிசெய்ய அனுமதி பெறுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பி கருத்துரு கோருவதற்கும், அனுமதி காலம் நீட்டிப்பு செய்வதற்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. வீடு வீடாக குப்பையை தரம் பிரித்து வாங்குதல், மைக்ரோ கம்போஸ் சென்டர் (MCC) உரம் தயாரித்தல் பணிக்கு தேவையான பணியாட்களை பணி செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 209**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :– 19**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அடிப்படை பணியாளர்களான துப்புரவு பணி மேற்பார்வையாளர், துப்புரவு பணியாளர்கள், இரவுக்காவலர், அலுவலக உதவியாளர், ஓட்டுநர் மற்றும் மதகு திறப்பாளர் ஆகிய பணியாளர்களுக்கு 2018–19 ம் ஆண்டிற்குரிய சீருடை தலா இரண்டு எண்ணமும், அதற்குரிய தையல் கூலி மற்றும் காலனிகள் இரண்டு செட் வழங்குவதற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பதவி | பணியாளர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 2 | 0 |
| 2 | துப்புரவு பணியாளர்கள் | 38 | 9 |
| 3 | இரவுக்காவலர் | 1 | 0 |
| 4 | அலுவலக உதவியாளர் | 0 | 1 |
| 5 | ஓட்டுநர் | 2 | 0 |
| 6 | மதகு திறப்பாளர் | 1 | 0 |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. சீருடைகள் மற்றும் காலனிகள் அரசு சார்பு நிறுவனமான காதி கிராப்ட் அல்லது கோ.ஆப்.டெக்ஸ் நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 210**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 20**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் நுழைவு வாயில் அமைக்க இரும்பினால் ஆன வளைவு (Steel Arch) வடிவமைத்து, வளையம் வழங்க கோரியதில், கட்டணமாக ரூ.11800/– செலுத்த வேண்டி அண்ணா பல்கலை கழகம் (இன்ஜினியரிங்) திண்டுக்கல், கடித எண்.PMC120/சிவில்/CS/2018 நாள்.05.08.2018–ல் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட தொகையில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணி அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், ஆய்வு கட்டணமாக ரூ.11800/– தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும், மேற்கண்ட தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 211**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 21**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட சின்னக்குளத்தினை தூர்வாரி கரைகளை பலப்படுத்தி நடைபாதை மற்றும் பூங்கா வசதிகள் மேற்கொள்ள மண் பரிசோதனை ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி மண் பரிசோதனை கட்டணமாக ரூ.94,400/– செலுத்த வேண்டி அண்ணா பல்கலை கழகம் (இன்ஜினியரிங்) திண்டுக்கல், கடித எண்.PMC119/சிவில்/CS/2018 நாள்.05.08.2018–ல் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட தொகையில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணி அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், ஆய்வு கட்டணமாக ரூ.94,400/– தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும், மேற்கண்ட தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 212**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 22</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தையில் கூடும் ஆடு, மாடு மற்றும் கோழி போன்ற இனங்களுக்கு வியாபாரிகள் சந்தையில் இரவு நேரங்களில் மின் விளக்குகள் போதியளவில் இல்லாததால், பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறாரார்கள். அதனை போக்கும் பொருட்டு வாரச்சந்தையில் பழுதடைந்த மின் விளக்குகளை பழுது நீக்கம் செய்தல் மற்றும் கூடுதல் மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 213**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 23</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 13.05 சதுர கி.மீ பரப்பளவுடன் 18 வார்டுகள் கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 30274 ஆகும். மக்கள் தொகை கணக்கீட்டின் படி தேவைப்படும் குடிநீரின் அளவு 2.72 எம்.எல்.டி ஆகும். தற்போது விருப்பாட்சி குடிநீர் திட்டம் மற்றும் காவிரி கூட்டு குடிநீர் திட்டஙகளின் மூலமாக நகர் பகுதி மக்களுக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் 5 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சட்டப்பேரவை மான்யக் கோரிக்கை எண்.34–ன் கீழ் –2018–19 நிதியாண்டு அறிவிப்பு எண்.14ன்படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 18 வார்டுகளிலும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தனியார் பங்களிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக மையங்கள் அமைத்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்க ஏதுவாக மையம் ஒன்றுக்கு 18.00 இலட்சம் வீதம் ரூ.324.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மையங்கள் (Public Private Partnership mode) ஏற்படுத்தவும், இத்திட்டத்தினை இந்நகராட்சியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பொது மக்களுக்கு குறைந்த விலையில் மேற்படி குடிநீர் விநியோகம் செய்யவும், மேற்படி விற்பனை விலையில் நகராட்சிக்கும் ஒரு பங்கு பெற்று சிறு வருவாய் ஈட்டும் வகையில் அப்பணியை செய்ய முறையான நிபந்தனைகளின் அடிப்படையில் ஆர்வம் உள்ள நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.324.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வார்டு பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவைக்கான இத்திட்டத்தினை 18 வார்டுகளிலும் செயல்படுத்த மதிப்பீட்டு தொகை ரூ.324.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 214**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 24**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM-2018-19) ரூ. 700.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கு சின்னக்குளத்தினை மேம்படுத்தும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்றிட தொழில்நுட்ப கலந்தாலேசகர் நிறுவனம் நியமணம் செய்திட ரூ.4.00 இலட்சம் செலவினத்திற்கு 27.06.2018–ம் தேதியில் தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து 13.07.2018–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகய் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனிஅலுவரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | பவித்ரா அசோசியேட்ஸ்,<br>4F, ஸ்ரீ சிருஷ்டி அபார்ட்மெண்ட்ஸ்,<br>மேடவாக்கம் மெயின் சாலை,<br>கோவிலம்பாக்கம், சென்னை–124 | ரூ. + 18 GST |
| 2 | டிசைன் ஸ்பெக்ட்ரம்,<br>42, லேபர் ஸ்கூல் தெரு,<br>அனகாபுத்தூர்,<br>சென்னை | ரூ. + 18 GST |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–ல் உள்ள ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு பவித்ரா அசோசியேட்ஸ், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரூ. + 18 GST வரப்பெற்றுள்ளது அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள பவித்ரா அசோசியேட்ஸ், சென்னை நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்கலாம்.
2. பணியின் அவசியம் கருதியும், மதிப்பீடகளை குறித்த காலத்தில் சமர்ப்பித்து, நகராட்சி நிர்வாக ஆணையரிடம் நிர்வாக அனுமதி மற்றும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 215**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 07.09.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.